[19th August 1955

" (*b*) The Government did not accord sanction to the proposal of the district board, as the opening of colleges is not one of the functions of the district board."

SRI S. RAMALINGAM :—" ஒவ்வொரு ஜில்லா போர்டிலும் ரயில்வே ரிசர்வ் நிதி சுமார் 7 லட்சம், 10 லட்சம் என்று சேர்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொகையை என்ன செய்வது என்று ஜில்லா போர்டுகள் முடிவு செய்யாமலிருப்பதால் அது குவிந்து கொண்டே வரு கிறது. இந்தத் தொகையை இப்படிப்பட்ட காரியங்களுக்கு, குறிப்பாக ஜனங்களுக்குத் தேவையான காரியங்களுக்கு, உபயோகப்படுத்துமாறு சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" ரயில்வே ரிசர்வ் நிதியை ரோடுகள் போடுவதற்கும் பாலங்கள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. இருந்தாலும் கனம் அங்கத் தினர் சொன்ன விஷயத்தைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்."

9-30 a.m. SRI M. PALANIYANDI :—" ஸ்தல ஸ்தாபன மந்திரியவர்கள் முன்பு பட்ஜெட் செஷனில் பேசும் காலத்தில், ஜில்லாக்களில் இந்தப் பணத்தைக் கல்வி ஸ்தாபனம், ரோடுகள், இவைகளுக்காகச் செலவழிக் கலாம் என்றும், அதற்கு முதன் மந்திரியிடம் அனுமதி வாங்கியிருப் பதாகவும் சொன்னார். அது விஷயம் என்னவாயிற்று ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அந்த விஷயத்தைப் பற்றி அந்த இலாகா மந்திரியிடத்தில் கேட்டால், அவர் பதில் சொல்வார். ஆனால், இங்குள்ள கேள்வி, ரெயில்வே ரிசர்வ் நிதியிலிருந்து காலேஜ் திறப்பதற்குப் பணம் கொடுக்கலாமா, கூடாதா என்பது. இப்போதிருக்கும் விதிகளின் பிரகாரம் காலேஜ் நடத்துவதற்கு அந்தபணத்தைக் கொடுக்க முடியாது."

SRI K. V. RAMASWAMI :—" ரெயில்வே செஸ் பண்டிலிருந்து பணம் கொடுக்க முடியாமலிருந்ததால், ஜில்லா போர்டே காலேஜ் திறப் பதற்கு லோகல் போர்டு ஆக்ட் பிரகாரம் சர்க்கார் அனுமதிப்பார்களா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இந்த 2 லக்ஷம் ரூபாய் கொடுப்பதற்கே கஷ்டம் என்று அபிப்பிராயப்படுகிறபொழுது, காலேஜை அவர்களே நடத்தினால் இன்னும் அதிகப் பணம் வேண்டி யிருக்கும். அவ்வளவு பணம் ஜில்லா போர்டுகளிடத்தில் இல்லை ; ஆகவே சர்க்கார் அவர்களே காலேஜ் திறக்க வேண்டாமென்று உத்திரவு போட்டிருக்கிறது."

DEPUTY SPEAKER :—" Question No. 2138 will be taken up tomorrow."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE DEPUTY SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER :—" I have to announce to the House the following message, dated 6th August 1955, received from the Governor of Madras :—

' In pursuance of Article 207, clause (1) read with Article 199, clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Land Revenue (Additional Surcharge) Bill, 1955' ."